பஹாமாசில் நடை பெறவிருக்கும் காமன் வெல்த்
பார்லிமெண்டரி மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும்
பேரவைத் தலைவருக்குப் பாராட்டுகளும் வாழ்த்துக்களும்.

1992 செப்டம்பர் 25] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 7-55

அங்கே முடிந்த அளவுக்கு நான் சொன்ன வகையில் சிலவற்றைக் கண்டு வருகிறேன். கண்டவற்றை உங்களுக்காகக் கொண்டு வருகிறேன் என்று தெரிவித்து, அந்த வகையில் எனக்கு உங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தமைக்காக மீண்டும் பேரவை முன்னவர் அவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்த வாழ்த்தொலிகளைத் தெரிவித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து அமைகிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் கூர்ந்து கவனிப்பதைப் பார்த்தால் தம்மையும் அவருடன் அழைத்துக் கொண்டு போவாரோ என்று எண்ணுகின்ற மாதிரி இருக்கிறது. மத்திய அரசு அன்னியச் செலாவணி நெருக்கடியில் அது நடக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு, விரைவில் நம்முடைய தமிழக பாராளுமன்றச் சங்கக் கிளையின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரை இதைப் போன்ற சுற்றுப் பயணங்களுக்கு அனுப்பலாமென்ற ஒரு குறிப்பு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் மேலான அனுமதிக்காக அனுப்பப்படுகிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடத்திலே ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். ஒரு குழு ஐரோப்பா கண்டத்திற்குப் போய் வரலாம். ஒரு குழு ஜப்பான் பகுதிக்குப் போய் விட்டு வரலாம். அதற்கான விவரங்களை எல்லாம் சேகரிக்கும்படியாகக் கேட்டிருக்கிறேன் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

8. அரசினர் தீர்மானம்.

மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் பேரவையை ஒத்தி வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவையின் 25(1)-வது விதியின்படி, பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய (25—9—1992) அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 7–57 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

92 தமிழ்நாடு 1990ஆம் ஆண்டு நாட்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளை 16—7—1991 முதல் தள்ளுபடி செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 27—6—1991–ஆம் நாளிட்ட 174 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

93 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—6—1992 ஆம் நாளிட்ட 213 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]